Electric lights for Vattavilai village

* 227 Q.—Thiru T. MARTIN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) Whether electric street lights were instaled in Vattavilai village in Udangudi Panchayat Union Council area in Tirunelveli District; and

(*b*) if not, when tehey will be installed?

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன்: (அ) திருநெல்வேலி மாவட்டம் உடன்குடி பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சேர்ந்த வட்டவிளை கிராமத்தில் எட்டு மின்சார விளக்குகள் நிறுவப்பட்டு 31—7—1968 தேதியிலிருந்து மின்இணைப்புக் கொடுக்கப்பட்டது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. மார்டின்: இன்னும் அந்தப் பகுதியில் பல கிராமங்களில் தெரு விளக்குகள் போடப்படாத நிலையுள்ளது. கான்பரன்ஸ் நடந்த நேரத்தில் திருநெல்வேலியில் அதைப் பற்றி அமைச்சர் அவர்களிடம் சுட்டிக்காட்டியும் இன்னும் அவை போடப்படாத நிலை இருக்கிறது. ஆகவே அதைக் கவனத்தில் கொண்டு இந்தக் கிராமங்களுக்கு மின்சார விளக்குகள் போடுவதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : அப்படி தமிழ்நாட்டில் 30,000 சிற்றூர்களும் கிராமங்களும் இருக்கின்றன. எல்லா ஊர்களுக்கும் அப்படி விளக்குகள் போடும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

Coimbatore District Motor and Automobile Labour Union

* 228 Q.—Thiru G. GOMTHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Government are aware that under the auspices of Coimbatore District Motor and Automobile Labour Union, a number of persons went on hunger strike about the 2nd July 1969; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் (அ) & (இ). ஆம். தாராபுரத்திலுள்ள அர்த்தநாரி பாலாம்பாள் மோட்டார் சர்வீஸ் என்ற பேருந்து நிறுவனத்தைச் சேர்ந்த திருவாளர்கள் சி. வேலுசாமி, ஆர். சிதாபதி ஆகியோர் பணியிலிருந்து நீக்கப்பட்டதற்காக 1—7—1969 அன்று உண்ணாவிரதம் இருந்தனர். தாராபுரம் அர்த்தநாரி பாலாம்பாள் மோட்டார் சர்வீஸ் நிறுவனத்தின் நிர்வாகத்தினர், மேற்சொன்ன இரண்டு பணியாளர்களையும் பயணச்சீட்டுகளை வழங்காமலிருந்த முறைகேடான செயலுக்காகப் பணியிலிருந்து நீக்கிவிட்டனர். தாராபுரத்திலுள்ள கோவை மாவட்ட மோட்டார் தொழிலாளர் சங்கம், மேற்குறிப்பிட்ட இரண்டு தொழிலாளர்களின் வேலை நீக்கம் குறித்து 28—4—1969 அன்றும் 9—6—1969 அன்றும்